# நாகை-இலங்கை பயணிகள் கப்பல் தொடக்கம்

## பிரதமர் மோடி பெருமிதம்; 40 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சேவை





நாகை - இலங்கை இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவையை சனிக்கிழமை காணொலிக் காட்சி மூலம் தொடங்கி வைத்து பேசிய பிரதமர் நரேந்திர மோடி.

**நாகப்பட்டினம், அக். 14:** நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து இலங்கை காங்கேசன் துறைமுகத்துக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்தை பிரதமர் நரேந்திர மோடி சனிக்கிழமை காணொலிக் காட்சி மூலம் தொடங்கி வைத்தார்.

'இந்தக் கப்பல் போக்குவரத்து சேவை மூலம் இந்தியா-இலங்கை உறவில் புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளது' என அவர் பெருமிதம் தெரிவித்தார்.

நாகை துறைமுகத்தில் இருந்து இலங்கைக்கு கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு இயக்கப்பட்டு வந்த பயணிகள் கப்பல் தீ விபத்து காரணமாக நிறுத்தப்பட்டது. நாகை- இலங்கை இடையே மீண்டும் பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை தொடங்கப்படும் என மத்திய அரசு அண்மையில் அறிவித்தது.

இதற்காக மத்திய அரசு ஒதுக்கிய ரூ.3 கோடி நிதியில் தமிழக அரசு மூலம் நாகை துறைமுகத்தில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக 'செரியபாணி' என்ற கப்பல் கொச்சியில் இருந்து நாகைக்கு கொண்டுவரப்பட்டு கடந்த 8, 9- ஆம் தேதிகளில் சோதனை ஓட்டம் நடைபெற்றது.

**புதிய அத்தியாயம்:** பயணிகள் கப்பல்போக்குவரத்துசேவையை பிரதமர் நரேந்திர மோடி சனிக்கிழமை காணொலிக் காட்சி மூலம் தொடங்கி வைத்துப் பேசியதாவது:

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ராஜீய மற்றும் பொருளாதார உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தை நாம் தொடங்குகிறோம். நாகப்பட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் கப்பல் போக்குவரத்து சேவை தொடங்கப்பட்டிருப்பது நமது உறவுகளை வலுப்படுத்துவதில் ஒரு முக்கிய மைல்கல் ஆகும்.

இந்தியாவும் இலங்கையும் கலாசாரம், வணிகம் மற்றும் நாகரிகத்தின் ஆழமான வரலாற்றைப் பகிர்ந்து கொள்கின்றன. நாகை மற்றும் அருகேயுள்ள நகரங்கள் இலங்கை உள்பட பல நாடுகளுடன் கடல் வணிகத்துக்கு நீண்டகாலமாகப் பெயர் பெற்றவை.

மகாகவி சுப்பிரமணிய பாரதி தனது 'சிந்து நதியின் மிசை' என்ற பாடலில் இரு நாடுகளையும் இணைக்கும் பாலம் பற்றிப் பேசி இருக்கிறார். இந்தக் கப்பல் போக்குவரத்து சேவை அந்த வரலாற்று மற்றும் கலாசார தொடர்புகள் அனைத்தையும் உயிர்ப்பித்துக் கொண்டுவருகிறது.

2015-ஆம் ஆண்டு நான் இலங்கைக்குப் பயணம் செய்ததைத் தொடர்ந்து, தில்லிக்கும் கொழும்புக்கும் இடையே நேரடி விமான சேவைகள் தொடங்கப்பட்டன. சென்னை - யாழ்ப்பாணம் இடையே நேரடி விமான சேவை கடந்த 2019-ஆம் ஆண்டு தொடங்கியது. தற்போது நாகப்பட்டினம் - காங்கேசன்துறை இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து இந்தத் திசையில் மற்றொரு முக்கிய செயலாகும்.

இந்தியாவின் உதவியுடன் இலங்கையில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் மக்களின் வாழ்க்கையை உணர்வுபூர்வமாகத் தொட்டுள்ளன. வடக்கு மாகாணத்தில் குடியிருப்புகள், குடிநீர், சுகாதாரம் மற்றும் வாழ்வாதார உதவி தொடர்பான பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை துறைமுகத்தைத் தரம் உயர்த்துவதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்கியதில் மகிழ்ச்சியடைகிறேன். வடக்கில் இருந்து தெற்கை இணைக்கும் ரயில் பாதைகளை மறுசீரமைத்தல், புகழ்பெற்ற யாழ்ப்பாணப் பண்பாட்டு மையத்தின் கட்டுமானம், இலங்கை முழுவதும் அவசரகால ஆம்புலன்ஸ் சேவை தொடக்கம், டிக் ஓயாவில் உள்ள பல்நோக்கு உயர் சிகிச்சை மருத்துவமனை உள்பட அனைவரும் இணைவோம், அனைவரும் உயர்வோம், அனைவரின் நம்பிக்கை, அனைவரின் முயற்சி என்ற தொலைநோக்குப் பார்வையுடன் நாம் செயல்பட்டு வருகிறோம்.

**ராமேசுவரம்-தலைமன்னார் கப்பல் போக்குவரத்து:** ராமேசுவரம் - தலைமன்னார் இடையே கப்பல்போக்குவரத்துசேவையை மீண்டும் தொடங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். நமது மக்களின் பரஸ்பர நன்மைக்காக இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த இலங்கையுடன் நெருக்கமாகப் பணியாற்ற இந்தியா உறுதி பூண்டுள்ளது என்றார் பிரதமர்.

இலங்கை பிரதமர் ரணில் விக்ரமசிங்க, இலங்கை கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோர் காணொலிக் காட்சி மூலம் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## வர்த்தக, கலாசார தொடர்புகள் மேம்படும்: இலங்கை அதிபர்



**கொழும்பு, அக். 14:** நாகப்பட்டினம்-காங்கேசன் துறை இடையிலான பயணிகள் கப்பல் சேவை, இருதரப்பு வர்த்தகம், கலாசார தொடர்புகள் மேம்பட உதவும் என்று இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கப்பல் போக்குவரத்து தொடக்க நிகழ்ச்சியில், அதிபரின் விடியோ செய்தி ஒளிபரப்பப்பட்டது. அதில், அவர் பேசியிருப்பதாவது:

'இந்தியா-இலங்கை இடையே போக்குவரத்துத் தொடர்பை அதிகரிக்கும் முக்கிய நடவடிக்கை இது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பாக் நீரிணை வழியாக இந்திய துணைக் கண்டம் மற்றும் இலங்கை இடையே மக்களின் போக்குவரத்து நடைபெற்றுள்ளது. அதன் மூலமே நமது வர்த்தகம், கலாசார தொடர்புகள் வளர்ந்து வந்துள்ளன. வடக்கு பகுதியில் நிகழ்ந்த போரால், இரு நாடுகளுக்கும் இடையே இந்தப் போக்குவரத்துத் தொடர்பு பாதிக்கப்பட்டது.

இப்போது அமைதி திரும்பிய நிலையில், கடல்வழிப் போக்குவரத்து மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக, பிரதமர் நரேந்திர மோடிக்கும் இந்திய கப்பல் கழகத்துக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

# போர்களுக்கும் விதிமுறைகள் உண்டு

## ஐ.நா. பொதுச் செயலர்



**நியூயார்க், அக். 14:** காஸாவின் வடக்குப் பகுதியில் இருந்து தெற்குப் பகுதிக்கு 24 மணி நேரத்தில் இடம்பெயருமாறு, சுமார் 10 லட்சம் பாலஸ்தீன மக்களுக்கு இஸ்ரேல் கெடு விதித்த நிலையில், 'இது மிகவும் ஆபத்தானது; சாத்தியமற்றது' என்று ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸ் தெரிவித்துள்ளார்.

'போர்களுக்கும்கூட விதிமுறைகள் உள்ளன' என்று அவர் வலியுறுத்தினார்.

பாலஸ்தீனத்தின் ஹமாஸ் ஆயுதப் படையினர் இஸ்ரேல் மீது சில தினங்களுக்கு முன் கடுமையான தாக்குதலைத் தொடுத்தனர். இதையடுத்து, இஸ்ரேல் ராணுவம் பதிலடி நடவடிக்கைகளில் இறங்கியது.

காஸாவில் ஹமாஸ் படையினரின் நிலைகளைக் குறிவைத்து, இஸ்ரேல் ராணுவம் வான்வழித் தாக்குதல் நடத்தி வருகிறது. இருதரப்பிலும் 3,000-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துவிட்ட நிலையில், ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

இதனிடையே, காஸாவின் வடக்கில் இருந்து தெற்கு பகுதிக்கு 24 மணிநேரத்தில் இடம்பெயருமாறு சுமார் 10 லட்சம் பேருக்கு இஸ்ரேல் ராணுவம் வெள்ளிக்கிழமை கெடு விதித்தது.

காஸாவில் உள்ள ஐ.நா. பள்ளிகள், சுகாதார மையங்கள், மருத்துவமனைகள் மற்றும் அதன் ஊழியர்களுக்கும் இந்த உத்தரவு பொருந்தும் என்று இஸ்ரேல் குறிப்பிட்டது.

வடக்குப் பகுதியில் ஹமாஸின் ஆயுத உள்கட்டமைப்புகளை குறிவைத்து தீவிர தாக்குதல் நடத்தும் நோக்கில், இஸ்ரேல் இந்த உத்தரவை வெளியிட்டிருந்தது.

இந்நிலையில், ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸ், நியூயார்க்கில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

காஸாவின் ஒட்டுமொத்த பகுதியும் முற்றுகையில் உள்ள நிலையில், 10 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களை உணவு, குடிநீர், தங்குவதற்கு இடம் இல்லாத பகுதிக்கு நகர்த்துவது மிகவும் ஆபத்தானது. சில சந்தர்ப்பங்களில், இது சாத்தியமற்றதாகும்.

தெற்கு காஸாவில் உள்ள மருத்துவமனைகள் ஏற்கெனவே நிரம்பிவழிகின்றன. வடக்கில் இருந்து வரும் புதிய நோயாளிகளை அந்த மருத்துவமனைகளால் ஏற்க முடியாது.

காஸாவில் நிலைமை மிக மோசமாக உள்ளது. கடந்த சில நாள்களில் மருத்துவ கட்டமைப்புகள் மீது 34 தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. அங்கு சுகாதார அமைப்புமுறை முற்றிலுமாக சீர்குலைந்துள்ளது. ஒட்டுமொத்த பகுதியிலும் குடிநீருக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. உள்கட்டமைப்புகள் பெருமளவில் சேதமடைந்துள்ளன.

போர்களுக்கும்கூட விதிமுறைகள் உள்ளன. எனவே, காஸாவில் மனிதாபிமான அடிப்படையில் உணவு, குடிநீர், எரிபொருள் போன்ற உதவிகள் ஐ.நா. தரப்பில் வழங்கப்பட அனுமதிக்க வேண்டும்.

சர்வதேச மனிதாபிமான சட்டம் மற்றும் மனித உரிமைகள் மதிக்கப்படுவதோடு, அவை உறுதி செய்யப்பட வேண்டும். பொதுமக்களின் உயிர் காக்கப்படுவது முக்கியம். அவர்களை கேடயமாக பயன்படுத்துவது தடுக்கப்பட வேண்டும். காஸாவில் உள்ள அனைத்து பிணைக் கைதிகளும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். இந்த நடவடிக்கைகளை உறுதி செய்வது, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரின் கடமை என்றார் குட்டெரெஸ்.

EVA STALIN IAS ACADEMY

# குடிமைப் பணி போட்டித் தேர்வர்களுக்கு ஊக்கத் தொகை

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்

**சென்னை, அக். 14:** குடிமைப் பணிக்கான முதல் நிலைத் தேர்வு எழுதும் தேர்வர்கள் 1,000 பேருக்கு 'நான் முதல்வன்' போட்டித் தேர்வுப் பிரிவின் கீழ் ஊக்கத் தொகையை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சனிக்கிழமை வழங்கினார்.

சென்னையில்நடைபெற்றஇதற்கான நிகழ்ச்சியில், போட்டித் தேர்வர்களுக்கு ஊக்கத் தொகையை வழங்கி அவர் பேசியதாவது:

இளைஞர்கள், மாணவர்களின் வேலைவாய்ப்புக்கான திறனை வளர்க்கவும், வேலைவாய்ப்புக்கு வழிகாட்டுதலை வழங்கவும் வகுக்கப்பட்ட திட்டம்தான் 'நான் முதல்வன்' திட்டம். ஒவ்வொருவருக்கும் விருப்பமான துறையில் முதலிடம் பெற வேண்டும் என்பதற்காக இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒரே ஆண்டில் 13 லட்சம் பேர் பயன் பெற்றுள்ளனர். 1.5 லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.

தனியார் துறை வேலைவாய்ப்புகளுக்காக மட்டும் 'நான் முதல்வன்' திட்டம் உருவாக்கப்படவில்லை. அரசுத் துறைகள் உள்பட அனைத்துத் துறைகளிலும் வேலைவாய்ப்பு பெற உருவாக்கப்பட்டது. மத்திய அரசுப் பணிகளில் நமது இளைஞர்கள் அதிக அளவில் இடம்பெற வேண்டும் என்பதற்காக இத்திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகளுக்கான தேர்வுகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**அதிர்ச்சி – வேதனை:** அரசுப் பணிக்கான போட்டித் தேர்வுகளுக்குப் பயிற்சி அளிக்க தனிப் பிரிவானது கடந்த மார்ச்சில் தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி, உயர் கல்வியில் சிறந்த பாடத் திட்டமும், உள்கட்டமைப்பு வசதிகளும் இருக்கின்றன. முதல் 100 சிறந்த கல்வி நிறுவனங்களில் 18 நிறுவனங்கள் தமிழகத்தில் இருக்கின்றன.

இத்தனை வசதிகள் இருந்தாலும் கடந்த சில ஆண்டுகளாக குடிமைப் பணி போன்ற மத்திய அரசுப் பணிக்கான தேர்வுகளில் தேர்ச்சி பெறும் தமிழக மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. இது பெரும் அதிர்ச்சியையும், வருத்தத்தையும் அளிக்கிறது. குடிமைப் பணித் தேர்வுகளில் தேர்ச்சி பெறும் மாணவர்களில் தமிழகத்தினர் 10 சதவீதத்துக்கு மேல் இருந்தனர்.

2016–ஆம் ஆண்டுக்குப் பிறகு அந்த எண்ணிக்கை பாதியாகக் குறைந்துவிட்டது. இந்த நிலை தொடர்ந்தால், மத்தியிலும், மாநிலத்திலும் அரசு உயர் பதவிகளில் தமிழர்களே இல்லாத நிலை ஏற்பட்டுவிடும். இதற்காகவே 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் போட்டித் தேர்வுகளுக்கென தனிப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

குடிமைப் பணி பிரதான தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு ரூ.25,000 ஊக்கத் தொகை வழங்க போட்டித் தேர்வுப் பிரிவு மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 435 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். முதல் நிலைத் தேர்வு எழுதும் மாணவர்களில் 1,000 பேருக்கு 10 மாதங்களுக்கு மாதந்தோறும் ரூ.7,500 வழங்கப்பட இருக்கிறது. இதற்காக நடத்தப்பட்ட மதிப்பீட்டுத் தேர்வை 50,000 பேர் எழுதினர். இதில் தேர்வான முதல் 1,000 பேருக்கு எனது பாராட்டுகள்.

**ஏழ்மை–சுமை:** குடிமைப் பணித் தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களின் பொருளாதாரச் சுமையை நீக்கும் வகையில் அரசால் உதவித் தொகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனத்தைச் செலுத்த இதுபோன்ற உதவித் தொகைகள் அளிக்கும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு மாணவர்கள் ஒவ்வொருவரும் தேர்வில் வெற்றி பெற வேண்டும்.

ஏழ்மை நிலைக்கு அஞ்சி குடிமைப் பணி கனவுகளை தமிழக இளைஞர்கள் தியாகம் செய்துவிடக் கூடாது என்றார் அமைச்சர் உதயநிதி.

இந்த நிகழ்வில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறைச் செயலர் தாரேஷ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் இன்னசென்ட் திவ்யா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



'நான் முதல்வன்' போட்டித் தேர்வுப் பிரிவின் கீழ், முதல் நிலை குடிமைப் பணிகளுக்கான தேர்வில் கலந்து கொள்ளும் 1,000 தேர்வர்களுக்கு ஊக்கத்தொகைக்கான காசோலைகளை சென்னை கலைவாணர் அரங்கில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் வழங்கிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின். உடன் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, தயாநிதிமாறன் எம்.பி. உள்ளிட்டோர்.

# 2024-க்கான கின்னஸ் உலக சாதனை புத்தகம்: இந்தியாவிலிருந்து 60 சாதனைகள்!

**புது தில்லி, அக்.14:** கின்னஸ் உலக சாதனை புத்தகத்தின் 2024–ஆம் ஆண்டுக்கான பதிப்பில் இந்தியாவிலிருந்து சிரபுஞ்சியில் இரு நாள்களில் அதிக அளவு பதிவு செய்யப்பட்ட மழை அளவு உள்ளிட்ட 60 சாதனைகள் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் புதிய சாதனைகள் பதியப்பட்டு புதுப்பிக்கப்பட்ட பதிப்பு வெளியிடப்படுகிறது. அந்த வகையில் 2024–ஆம் ஆண்டுக்கான பதிப்பு தற்போது வெளியிடப்பட்டுள்ளது. உலக அளவில் நிகழ்த்தப்பட்ட 2,638 சாதனைகள் இடம்பெற்றுள்ள அந்தப் பதிப்பில் இந்தியாவிலிருந்து 60 சாதனைகள் பெற்றுள்ளன.

**9 பகுதிகள்:** நீர்வாழ் உயிரினங்கள், சாகசங்கள், தொழில்நுட்பம், கலை, விளையாட்டு உள்ளிட்ட 9 பகுதிகளின் கீழ் சாதனைகள் தொகுக்கப்பட்டுள்ளன. மேலும் வாழ்த்தரங்கம், இளம் சாதனையாளர்கள், விளக்கவுரைகள், கேமிங் உள்ளிட்ட 5 சிறப்பம்சங்களும் இடம்பெற்றுள்ளன.

**இந்தியாவின் சாதனைகள் சில...** மேகாலய மாநிலத்தில் உள்ள சிரப்புஞ்சியில் 1995–ஆம் ஆண்டு ஜூலை 15,16 ஆகிய இரு நாட்கள் 2.493 மீ அளவில் பெய்த மழையே உலக அளவில் இரு நாட்கள் பதிவு செய்யப்பட்ட அதிகமான மழை அளவு என உலக வானிலை அமைப்பு சான்றளித்துள்ளது.

உலகின் மிக உயரமான மற்றும் விலை உயர்ந்த தனிநபரின் இல்லம் என்ற பெருமையை இந்திய தொழிலதிபர் முகேஷ் அம்பானியின் 27 மாடி இல்லமான 'அன்டிலியா' பெற்றுள்ளது. தமிழ்நாட்டைச் சேர்ந்த ரூபா கணேசன் மெர்மெய்ட் வடிவிலான யோகாசனத்தை 1.15 மணி நேரத்துக்கும் மேலாக தொடர்ந்து செய்து காட்டிய சாதனையும் இடம்பெற்றுள்ளது.

நிகழாண்டு கின்னஸ் உலக சாதனை புத்தகத்தின் தொகுப்பு ஆசிரியர் கிரெய்க் கிளெண்டே கூறுகையில்,'நிகழாண்டு புத்தகத்தில் இடம்பெற 30,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அவற்றுள் 2,638 சாதனைகள் மட்டுமே எங்கள் பதிவு மேலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டன. சிறப்பான தடகள வீரர்கள் முதல் நீருக்கடியில் சாகசம் நிகழ்த்திய வர்கள் வரை பெரும்பாலான சிறந்த சாதனைகளை நிகழாண்டுப் பதிப்பில் வெளியிட்டுள்ளோம்' என்றார் அவர்.

Activate Windows
Go to Settings to activate Win

# உலகப் புகழ்பெற்ற மைசூரு தசரா திருவிழா இன்று தொடக்கம்

**மைசூரு, அக். 14:** தசரா திருவிழா மைசூரில் ஞாயிற்றுக்கிழமை (அக். 15) கோலாகலமாக தொடங்கவுள்ளது. சாமுண்டி மலையில் நடைபெறும் சிறப்பு பூஜையில் பிரபல கன்னட திரைப்பட இசை அமைப்பாளர் ஹம்சலேகா விழாவைத் தொடங்கிவைக்கிறார்.

உலகப் புகழ்பெற்ற தசரா திருவிழா மைசூரில் ஞாயிற்றுக்கிழமை (அக்.15) தொடங்கி அக். 24-ஆம் தேதி வரை 10 நாள்கள் நடைபெறவுள்ளது. விழாவை மைசூரு, சாமுண்டிமலையில் உள்ள சாமுண்டீஸ்வரி அம்மன் கோயிலில் ஞாயிற்றுக்கிழமை காலை 10.32 மணிக்கு சிறப்பு பூஜையில் பங்கேற்று பிரபல கன்னட திரைப்பட இசை அமைப்பாளர் ஹம்சலேகா தொடங்கிவைக்கிறார்.

ஜி.டி.தேவெ கௌடா எம்எல்ஏ தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் முதல்வர் சித்தராமையா, துணை முதல்வர் டி.கே.சிவகுமார், சமூகநலத் துறை அமைச்சர் எச்.சி.மகாதேவப்பா உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

சிறப்பு பூஜைக்கு பிறகு பல்வேறு நிகழ்ச்சிகளை முதல்வர் சித்தராமையா தொடங்கிவைக்கிறார். அரண்மனை வளாகத்தில் மாலை 7 மணிக்கு நடைபெறும் கலை விழாவை முதல்வர் சித்தராமையா தொடங்கி வைக்கிறார். தசரா திருவிழாவை முன்னிட்டு மைசூரில் உள்ள அரண்மனை, மிருகக்காட்சிச் சாலை, சாமுண்டீஸ்வரி அம்மன் கோயில், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ளிட்ட முக்கிய இடங்கள் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன; சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளன. தெருவிளக்குகள் செப்பனிடப்பட்டுள்ளன.

உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்து செல்ல ஏதுவாக பேருந்து வசதிகள், தங்கும் விடுதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. விழாவை


(கோப்புப்படம்)

முன்னிட்டு மைசூரில் கிராமியக் கலை விழா, திரைப்பட விழா, உணவு விழா, இளைஞர் விழா, சிறுவர் விழா, மகளிர் விழா, இசை விழா, நடன விழா, தோட்டக்கலை விழா, விளையாட்டுப் போட்டிகள், குஸ்தி போட்டி, சாகச நிகழ்ச்சிகள், பொருள்காட்சி போன்ற ஏராளமான நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

விழா நடைபெறும் 10 நாள்களும் லட்சக்கணக்கான மக்கள் மைசூருக்கு வரயிருப்பதால், நகரெங்கும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. கர்நாடகத்தில் வறட்சி நிலவுவதால் எளிமையான முறையில் தசரா விழாவைக் கொண்டாட கர்நாடக அரசு திட்டமிட்டுள்ளது.

**சிறப்புப் பேருந்துகள்:** கர்நாடக மைசூரு தசரா பண்டிகையை முன்னிட்டு, 2,000 சிறப்புப் பேருந்துகளை இயக்க மாநில அரசு ஏற்பாடு செய்துள்ளது.

தசரா பண்டிகையையொட்டி, அக். 20 முதல் 26-ஆம் தேதி வரை பெங்களூரு மெஜஸ்டிக் கெம்பேகௌடா, மைசூரு சாலை சேட்டிலைட், சாந்தி நகர், பீன்யா உள்ளிட்ட பேருந்து நிலையங்களிலிருந்து சென்னை, ஹைதராபாத், ஊட்டி, சீரடி உள்ளிட்ட இடங்களுக்கும் மைசூரு சாலை சாட்டிலைட் பேருந்து நிலையத்தில் இருந்து மைசூரு, ஹுன்சூர், பிரியாப்பட்டணா, விராஜ்பேட்டை, குஷால் நகர், மெர்கரா உள்ளிட்ட இடங்களுக்கும் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

அண்டை மாநிலங்களிலிருந்து வரும் பயணிகள் பெங்களூருக்கு திரும்பும் வகையில் அக். 24 முதல் 29-ஆம் தேதி வரை கூடுதலாக சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. சிறப்புப் பேருந்துகளில் பயணிக்க முன்பதிவு செய்து கொள்ளும் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பெங்களூரு, மைசூரு, மங்களூரு, சென்னை உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் உள்ள 750 முன்பதிவு மையங்களில் சிறப்பு மற்றும் வழக்கமான பேருந்துகளுக்கு முன்பதிவு செய்துகொள்ளலாம். ஒரே பயணச்சீட்டில் 4 பேருக்கு மேல் முன்பதிவு செய்தால் 5 சதவீத தள்ளுபடியும், மறுபயணம் மேற்கொண்டால் 10 சதவீத தள்ளுபடியும் வழங்கப்படுகின்றன என்று கர்நாடக மாநில சாலைப் போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

EVA STALIN IAS ACADEMY